சிங்கப்பூர்

# புதிய தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு ஆதரவளிக்கும் Nanyang Frontier நிதித் திட்டம்

வாசிப்புநேரம் - 1 நிமிடம்




படம்: PMO

வெளியீடு : 04 Nov 2024 10:07PM

Aa

புதிதாகத் தொடங்கப்படும் அதிநவீனத் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு ஆதரவளிக்க 50 மில்லியன் வெள்ளி நிதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, தொடக்க, வளர்ச்சிக் கட்டங்களில் ஆதரவு வழங்கப்படும்.

Nanyang Frontier நிதி ஆரம்பத்தில் உயிரியல் தொழில்நுட்பம், இயந்திர மனிதக்

கருவிகள், இயந்திரக் கற்றல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும்.

நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் Walden International தொழில் மூலதன நிறுவனத்துடன் இணைந்து நிதியை அமைத்துள்ளது.

கடந்த பத்தாண்டில் 120க்கும் மேற்பட்ட அதிநவீனத் தொழில்நுட்ப நிறுவனங்கள் ஆரம்பிக்கப்படுவதற்குப் பல்கலைக்கழகம் உதவியுள்ளது.

கடந்த ஓராண்டில் வர்த்தகப் பயன்பாட்டுக்காக 100க்கு மேற்பட்ட தொழில்நுட்பங்களுக்கு அது உரிமம் வழங்கியுள்ளது.

உலகப் புகழ்பெற்ற தொழில் முதலீட்டாளரும் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவருமான டான் லிப் பூ ஐந்து மில்லியன் வெள்ளி முதலீட்டுடன் நிதியைத் தொடங்கிவைத்தார்.

பல்கலைக்கழகம் அதே தொகையைக் கூட்டாக முதலீடு செய்யும்.

*ஆதாரம் : Others*